# வர்ம பீரங்கி

திருமுருகன் தன் பாதம் சென்னியிலேந்திக் கொண்டு

கருவொரு நூலையானும் காசினிதனிலே விள்ள

பெருக நூல் சொல்லவில்லை பேணியே இந்த நூலை

பருகிய சித்தரெல்லாம் பார்த்தென்னை மகிழ்ந்தாரையா. (1)

மகிழ்ந்தென்னைப் புகழ்ந்த போது மாமலைதன்னிற்சென்று

அகமகிழ் புவியின் கண்ணே யாருக்கும் அறியவென்று

புகழ்ந்துயான் இந்தநூலை பூதலமெல்லாம் மெய்க்க

சுகந்தமாம் பீரங்கியென்று சொல்லுவார் கும்பயோனே. (2)

கும்பயோன் சொன்னபோது குணமுள்ள குமரவேலும்

அம்பரர்க்கல்லால் இங்கு யாருக்கும் ஆகாதென்று

தம்பமாம் பீரங்கி நூலை தானுமே கண்டெடுத்து

எம்பெருமானுக்கென்று இணங்கி நூல் எடுத்துவைத்தார். (3)

வைத்ததோர் நூலைத்தானும் மாதவன் பார்த்தபோது

இத்திசையொருவன் காண இந்த நூல் கொடுக்கமாட்டார்

சித்தர்க்கும் நமக்குமல்லால் சொல்ல ஓர் சுருதி மார்க்கம்

பத்தருக்காகுமென்றால் பாவியோர்க்காகாதென்றே. (4)

என்றதோர் நூலைத் தானும் இவரெல்லாம் ஒன்றுகூடி

மன்றினில் மனிதர் தன்மேல் வருவர்மங்கள் தீர்க்க

கன்றினில் சுரபி போல காலங்கள் அதிலே கண்டு

சென்றவர் இளக்குமார்க்கம் செய்கையும் செப்புவேனே. (5)

செப்புவேன் பீரங்கி நூலை ஜெகதலமெல்லாம் மெய்க்க

தப்புகள் வராவண்ணம் சத்தியமாகச் சொல்வேன்

இப்புவியோர்கட்கெல்லாம் இணக்கமாய் ஈய்ந்த நூலை

அப்படியான நூலை யாருக்கும் ஆகுமென்றேன். (6)

## வர்மங்களின் இருப்பிடம்

ஆகுமே வர்மத்தின் வகைகள் எல்லாம்

அடங்குமோ பாரில் அடங்காது சொன்னேன்

தாகுமே வர்மம் ஒரு நூற்று எட்டிற்கும்

தலமதனைப் பிரித்துரைக்கும் சார்புகேளு

ஏகுமே கண்டத்தின் மேலதாக

எழுந்தவர்மம் இருபத்தைந்தும் கேளாய்

போகுமே உலகத்தில் பெரியோரென்று

புகலுவார் பொருளறியாப்புல்லர் தாமே. (7)

# கண்டத்தின் மேல் உள்ள வர்மங்கள்

ஆமென்ற சிரசின் நடு கொண்டைக் கொல்லி

அதின் பின்னே ஒட்டையின் கீழ் சீறுங்கொல்லி

ஓமென்ற அங்குலம் நாலுக்கு கீழ் பிடரிவர்மம்

உச்சியில் நின்று எண்விரலின் கீழ் சுருதி வர்மம்

தேமென்ற இருவிரலின் கீழ் பொற்சைக்காலம்

தானாக ஓரிறை குற்றிக்காலம்

காமென்ற சிறு தண்டருகில் செவிக்குற்றிக் காலம்

கனமான இரண்டிறை மேல் பொய்கை காலம். (8)

காலமாம் கடைவிழியின் கீழ் நட்சத்திரகாலம்

காலமதன்கீழ் இரண்டிறையில் காம்பூரிக்காலம்

காலமதின் வலத்திறை மூன்றில் மூர்த்தி காலம்

காலமரை இறையின் கீழ் அண்ணான் திலர்தக்காலம்

காலமென்ற அரையிறை கீழ் மின்வெட்டிக்காலம்

இருபுறமும் ஆகுமது கண்டு பாரே

காலமாம் கருவிழியின் அருகில் மந்திரக்காலம்

காலமிது இருபுறமும் பாரு பாரே. (9)

பாரப்பா நெற்றி நடு நேம வர்மம்

பகரும் அரையிறையின் கீழ் பட்சி வர்மம்

காரப்பா நாசி நடு கண்ணாடிக் காலம்

கண்டு அதின் மையமதில் பால வர்மம்

கூரப்பா கோண வர்மம் செவியின் கீழே

கூறலாம் அங்குலம் நாலு உதிரக்காலம்

ஆரப்பா கீழ்நாடி ஒட்டு வர்மம்

அதனருகில் உறக்கம் என்ற காலமாமே. (10)

அதின் கீழ் நால் அங்குலத்தில் சுமை வர்மம் தான்

ஓமப்பா கண்டத்தின் மேலதாக

உச்சிமுடி இருந்த எல்லை ஒடுக்கம் கண்டு

தாமப்பா வர்மமது இருபத்தைந்தும்

சரியாச்சு உந்தி தொட்டுக் கண்டம் ஈறாய்

வாமப்பா வர்மமது நாற்பத்தைந்தும்

வகையாக அதன் விபரம் வழுத்தக் கேளே. (11)

## உந்தி முதல் கண்டம் வரை வர்மங்கள்

வழுவிலா தோளில் இரண்டங்குலம் மருவு

வன்மையுள்ள காக்கட்டைக்காலம் தொண்டையின்

கீழ் இரு விரற்கிடையில் கதிர்வர்மம்

கீழ் இறை ரெண்டில் கதிர்க்காமம் யிறை கீழ்பற்றி

எழுவில்லா புத்தி இறைகீழே சத்தி காரை

எல்லின் கீழ் ரண்டதிலே திவளைக்காலம்

கழிவில்லா தோரிறை வலமே ஏந்தி

காலமே இருபுறமும் கண்டு கூறே. (12)

கூறியதோர் கீழ் கமுக்கூட்டின் மீதே

கொடிய பிறதாரையின் கீழ் எழுத்து வர்மம்

ஆறுமுலைகண்ணில் தூசிகன் இறை கீழ்

அனுமார் வர்மம் முடிப்பில் கூம்பு வர்மம்

மீறும் இறை மூன்றிற்குள் நேர் வர்மம் பன்றி வர்மம்

முண்டெல் மேல் அங்குலம் நால் அடப்பக்காலம்

தேறுமுண்டெல் இருவிரலின் கீழ் பெரிய அத்தி சுருக்கி

தெரிந்து இறை கீழ் சிறிய அத்திச் சுருக்கி. (13)

சுருக்கியின் மேல் நால்விரலில் முன் சுருதி வர்மம்

துன்னு பின் சுருதி வர்மம் பள்ளைதனில் பள்ளை வர்மம்

வருந்தியே ஈரெட்டு எல்லில் உடல் சுளுக்கி வர்மம்

நேரான வர்மத்தின் நேர் தும்மிக்காலம்

கருதியே தும்மியின்மேல் நாலிறைக்குள்

கைகெட்டிக்காலம் மேலிறை ரெண்டில் சடப்பிறக்காலம்

இருக்கு இறையின் மீது கிளிப்பிறையாம் வர்மம்

இரண்டிறை மேல் கிளிமேக வர்மம் காணே. (14)

காணரிய திவளை நேர் முதுகில் பூணூல் காலம்
கண்டு பார் இருபுறமும் கருத வேண்டும்
நாணமுறு மூலத் தண்டில் நட்டெல்வர்மம்
நழுகியதின்கீழ் கச்சைக் காலம் என்பார்
கோணும் அடைப்பின் மேல் கைகூட்டிக் காலம்
குறுக்கு ஈரெட்டு முனையும் வாயுக்காலம்
சாணுறவே வர்மமது நாற்பத்தைந்தும்
தலமதனை பரித்துரைத்தோம் தகமை காணே. (15)

## நாபி முதல் மூலம் வரை வர்மங்கள்

தகையாத நாபி முதல் மூலம் மட்டும்
சார்ந்த தொகை ஒன்பதுக்கும் தலத்தை கேளு
தகை நாபி நால் விரல் கீழ் மூத்திரக்காலம்
தக்க கல்லிடைக்காலம் வலம் இறைக்குள்
மகிழும் வலம்புரிஇடம்புரிவர்மம்
வெல்லுறுமி வல்லுறுமி நரங்கல் குத்தி
மிகு நரங்கல் மீதே அணி வர்மம் அரையிறை
மீது ஆந்தை வர்மமென விளம்புவாரே. (16)

## கையிலுள்ள வர்மங்கள்

வாரும் கரமதில் ஈரேழு அங்குலத்தில் மொழி புறம்கண்
தெட்சணையின் காலம் அருகினில் குண்டோதரிவர்மம்
பெருவிரலுக்கிடை சுண்டோதரியாம் உள்ளம் கை
வெள்ளை வர்மம் மணிக்கட்டில் மணபந்தக்காலம்
பாரு மணிபந்தத்தின் நால்விரல் மேல் ஆந்தை வர்மம்
முட்டுக்குழி மடக்கில் முடக்கு வர்மம்
பூரண கை தவளை நடு முண்டகத்தோள்
புயந்தனிலே அசைவு வர்மம் புகலலாமே. (17)

## காலிலுள்ள வர்மங்கள்

ஆமென்ற பாதமதில் மூவைந்தப்பா
அவனிதனில் உள்ளங்கால் வெள்ளை வர்மம்
வேமென்ற உப்புக்குற்றிக்காலம் பாதம்
விரல் மொழிக்குள் குண்டிகைக்காலம் என்பர்
காமென்ற பெருவிரல் ரெண்டிறை மேல் விர்த்திகாலம்
மேலோர் இரண்டதனில் சுண்டோதரிவர்மம்
பாமென்ற சுண்டோதரிவர்மம் மீதில்
பட வர்மம் கண்ணு புகைக்காலம் எண்ணே. (18)

விச நரம்பு குதிகால் வர்மம்

குதிரை முகக்காலம் முழங்கால் முட்டு வர்மம்

தொடையின் நடு தொடைதட்டிக்காலம்

தவறாமல் நூற்றெட்டுத் தலமும் கண்டு

கோலமுடன் வகுத்துரைத்த பீரங்கி நூலில்

கூறுமதின் காலத்தின் குணங்கள் தன்னை

தாலமதில் உரைத்திடும் நற்பொருளதாக

தயவாக சார்ந்து நிற்கும் ஆதார தலத்தில் நின்றே. (19)

## (1). கொண்டைக்கொல்லி

தலை முடிந்த கொண்டைக் கொல்லி

கேடு வந்திடுகில் குணத்தைக் கேளு

கொண்டையது தளர்ந்து போகும்

செய்யும் ஸ்திரிபோகமது விழுந்து போகும்

சன்னி சிலேற்பனந்தான் வந்து

பழிகேடு செய்துவிடும் பலம் தானப்பா

வர்மமது கொண்டதானால்

கடந்த உயிரெனவே கண்டு கொள்ளே. (20)

## (2). சீறுங்கொல்லி

கொள்ளவே இன்னும் ஒரு சீறுங்கொல்லி
கொண்ட உடன் தலையுருட்டும் குறிகேடாக
தள்ளுவாய் நுரை தள்ளும் குறுக்கும் கூனும்
தாக்குமப்பா நாக்கையுமே உள்இழுக்கும்

## (3). பிடரிவர்மம்

அள்ளுமப்பா பிடரிவர்மம் குணத்தைக் கேளு
அடித்தவுடன் கண் சிவக்கும் நாக்குத்தள்ளும்
பிறை அடங்கலிலே இளக்கச் சொன்னோம்
பாங்கான நாழிகை தான் இருபத்தேழே. (21)

## (4). சருதி வர்மம்

தானான சருதி வர்மம் குணமேதென்னில்
தலையுருட்டும் பனி குளிர்ந்து அடிக்கும் பாரு
பானான கடிகையது பதினெட்டுக்குள்
பார்த்திடவே சாத்தியமாம் பதனமாக

## (5). பொற்சை காலம்

பூனான பொற்சை என்ற காலம் கொண்டுதானால்

புகையுமடா கண்ணுரெண்டும் புகைச்சல் காய்ச்சல்

கானான பொய்கை குத்தும் புருவம் சீறும்

கடிகை அறுபது சென்றால் சாத்தியம் சொல்லே. (22)

## (6). குற்றிக் காலம்

சொல்லும் குற்றியென்ற காலம் கொண்டால்

சுழலுமே சரீரமது துடிக்கும்பாரு

பல்லு விழி ரண்டும் அடைத்திருக்கும் நாழிகை

பத்தொன்பதுக்குள் முறையை பார்த்து நோக்கு

## (7). செவிக்குற்றிக் காலம்

-

கொல்லுவது செவிக்குற்றிக் காலம் சுண்டு

கோணி வாய் மூக்கில் ரெத்தம் கொப்பளிக்கும்

முல்லையுடல் மயங்கும் இருபத்தொன்பதுக்குள்

முன்னாக இளக்குமந்த முறையைப் பாரே. (23)

## (8). பொய்கைக் காலம்

பாரப்பா இன்னுமொரு பொய்கைக்காலம்
  பட்ட உடன் மயங்கிவிடும் பதனமாக
சீரப்பா நாழிகை தான் ஐம்பத்தொன்று
  சென்றவுடன் பிணி தீர்ந்து சுகமாய் திரிவான்

## (9). நட்சத்திரக் காலம்

காரப்பா நட்சத்திரக் காலம் கொண்டால்
  கண்ணு ரெண்டும் சிவந்து முகம் கோணும் பாரு
வாடப்பா உடல் துடிக்கும் வாய் நீரோடும்
  மாற்றுமுறை பதினெட்டிற்குள் வகுத்துக் காணே. (24)

## (10). காம்பூரிக் காலம்

காணவே காம்பூரிக்காலம் கொண்டால்
  கடிவிசம் கொண்டதுபோல் கண்காணாது
வீணவே அம்மூலி மத்திப்பிட்டால் விட்டு விடும்
  கண் புகைச்சல் எட்டுக்குள்ளே

## (11). வலமூர்த்திக் காலம்

வாணவே வலமூர்த்தி குணமேதென்னில்
மண்டையிலே உளைவு குத்துமயக்கமாகும்
பூணவே அரத்தை சிறுபுள்ளடி அரைத்துப்
பூசிடவே குத்துவலி உளைச்சல் போமே. (25)

## (12). அண்ணான்காலம்

வலுவாக அண்ணானின் காலம் கொண்டால் கன்னல்
வரும் பதினெட்டிற்குள் மயக்கமாகும்
கலியாக மயங்காமலிருந்ததானால்
கலங்காதே கைமுறையாய் செய்து பாரு

## (13). திலர்தக் காலம்

அலையாமலே திலர்தக்காலம் கொண்டுதானால்
ஆள் நிமிர்ந்து அண்ணாந்து வாய்பிளக்கும்
விலகாகமல் கடிகையது மூன்றே முக்கால்
விட்டு விட்டால் அசாத்தியமாய் மீளாதென்றே. (26)

## (14). மின்வெட்டிக் காலம்

மீளவே மின்வெட்டிக்காலம் கொண்டால்
மேகத்தைப் பார்க்கும் மலம் பிடித்துக் கொள்ளும்
தாளவே வலிக்குமது பீசத்தோடே
தான் பிடிக்கும் சத்தியமாய் இன்னும் கேளு
கோளில்லா மறுபுறமும் கொண்டால் குத்து
கொளுத்துவலி கண்கூசும் மயக்கமாகும்
கொள்ளுகின்ற தைலமது சிரசில் போட்டால்
கடிகை இரு நாலுக்குள் கருணையாமே. (27)

## (15). மந்திரக் காலம்

கருதியே மந்திரக்காலம் தன்னைக்கேளு
கருதும் உடல் மயங்கியே முகமும் சீறும்
குருதியே கண் விழித்துக் கொட்டாவி போடும்
கூறும் கன்னல் ஐந்திற்குள் எழுந்து பேசும்

## (16). நேம வர்மம்

மருகவே நேம வர்மம் கொண்டால் கேளு

கபம் விம்மி மூச்சடைக்கும் தலையுருட்டும்

பருதியென சன்னி சிலேற்பனம்தான் வந்து

பழிகேடு செய்துவிடும் பதனம் பாரே. (28)

## (17). பட்சி வர்மம்

பதனமாய் பட்சி வர்மம் கொண்டுதானால்

பண்பான அலகுரெண்டும் ஒதுக்கிப்போடும்

அதனமாய் வாயது தான் பூண்டு காணும்

அலகொதுங்கி வலித்திடும் வாய் அகலும் பாரே

## (18). கண்ணாடிக் காலம்

மதமான கண்ணாடிக்காலம் கொண்டால்

மயங்கிவிடும் தேகமது தளர்ச்சை மெத்த

இதமான இருசெவி இரு நாசியோடும்

ரெத்தம் வரும் கண்ணடைக்கும் நிலையை பாரே. (29)

## (19). பால வர்மம்

பாரப்பா பாலவர்மம் உதிரச்சன்னி

பாராட்டும் குணங்கள் வலி கொழுத்துக்குத்து

வேரப்பா குறிகுணங்கள் பிழைத்ததானால்

மீளாது வெகு கடினம் மெய்தான் சொன்னேன்

## (20). கோண வர்மம்

ஊரப்பா கோணவர்மம் கொண்டுதானால்

உதடு ஒருபக்கம் கோணி முகம் வியர்க்கும்

தூரப்பா தாகமது மிகுதியுண்டாம்

சுக்கிட்டு வெந்நீர் கொள் சுகமதாமே. (30)

## (21). உதிரக் காலம்

தானென்ற உதிரக்காலத்தைக் கேளு

சன்னி தான் எழும்பிவிடும் நாடி சாயும்

வேமென்ற தலைவலிக்கும் கடிகை பத்தின்

மேலொன்பதற்குள் வர்மம் மீளும் சொன்னேன்

## (22). ஒட்டு வர்மம்

ஓமென்ற ஒட்டு வர்மம் கொண்டுதானால்

கோ கோ அலகுரண்டும் பூண்டு போகும்

வாமென்ற நாழிகை ஓரெட்டுச் சென்றால்

சாத்தியமாய் இது குறியை அறிந்து நோக்கே. (31)

## (23). உறக்கக் காலம்

அறிவான உறக்கத்தின் காலம் கொண்டால்

அப்பனே விழிமயங்கும் அலகும் பூட்டும்

தறிவான கடிகை தொண்ணு}ற்றாறு சென்றhல்

தான் தானே எழுந்திருப்பான் சடவில்லாமல்

## (24). சங்குதிரிக் காலம்

-

பொறியான சங்குதிரிகாலங்கொண்டால்

பொருத்துவிடும் முகம் தன்னை திருப்பி வைக்கும்

காpயான அடிவயிறு கனக்கும் சொன்னேன்

கையுடனே செய்முறையை கண்டு நில்லே. (32)

## (25). சுமை வர்மம்

கண்டிடவே சுமைவர்மம் கொண்டதானால்

கருதிய வாய் வழியே நுரையும் பதையும் தள்ளும்

கொண்டிடவே வர்மமது இருபத்தைந்தும்

குறிகுணங்கள் தனை உரைத்தோம் குறிப்பதாக

மண்டிடவே கண்டத்தின் மேலேவந்த

வர்மத்தில் தலங்கள் தன்னை நீ வகுத்துணர்த்து

விண்டிடவே இளக்குமுறை அடங்கல் தன்னை

விபரமுடன் உலகறிய விள்ளுவோமே. (33)

## அடங்கல்

-

ஓமென்ற உச்சிதன்னில் முடியைத் தாழ்த்து

உள்தாரை பிறதாரை தடவி ஏந்தி

ஆமென்ற நாடிதனை ஏந்திக் கொண்டு

அப்பனே பிடரியசைத்து ஏந்திச் செய்தால்

ஓமென்ற இருசெவியும் ஊதிக்கொண்டு

உள்ளே ரண்டு விரலிட்டு அசைவுகெட்டி

தாமென்ற எல்லில் கை கொண்டு சற்றே

தடவி விட சீவனது தங்கும் பாரே. (34)

## தைலம்

பாற்கவே தைலமொன்று சொல்லக்கேளு

பதிவான நல்லெண்ணெய் நல்வேப்பெண்ணெய்

வேற்கவே சமனாக மிளகு சுக்கு

வெள்ளுள்ளி வசம்பு கஸ்தூரிமஞ்சள்

காற்கவே கருஞ்சீரகம் தேவதாரம்

கச்சோலம் சாதிக்காய் சமனதாக

வாற்கவே எண்ணெய் தன்னில் பொடித்துப் போட்டு

வெந்து வடித்ததனை விதம்போல் செய்யே. (35)

விதமான கண்டத்தின் மேலே நின்ற

மேல் வர்மம் இருபத்தி ஐந்தின் விபரம் சொன்னேன்

இதமான பேர்தலமும் குணமும் சொன்னேன்

திரும்பவே இளக்குமதின் அடக்கம் சொன்னேன்

பதமான தைலத்தின் பாகம் சொன்னேன்

பாக்கியமே உள்ளோருக்குப் பலிதமாகும்

விதமான உந்தி வர்மம் நாற்பத்தைந்தும்

முறைமுறையே குணமதனை அறிந்து பாரே. (36)

## (26). காக்கட்டைக் காலம்

பாரப்பா காக்கட்டைக் காலம் தானும்

பட்டவுடன் ஆள் நிமிரும் கொழுத்தும் கைகால்

வாரப்பா கடிகை ஈறாறுக்குள்ளே

மருவு குணம் அறிந்து மறுகாலம் நோக்கு

## (27). கதிர் வர்மம்

காரப்பா கதிர்வர்மம் கொண்டபேர்க்கு
கண்ணுரண்டும் தள்ளுமடா கக்கல் விக்கல்
சீரப்பா கண்டிடிலோ கடிகை மூன்று
சென்றிடாது அசாத்தியம் தெளிந்துகொள்ளே. (37)

## (28). கதிர்காம வர்மம்

தெளிவான கதிர்காம வர்மம் கொண்டால்
செய்குணமே தேகமது குளிரும் சன்னி
மொழியாத வலியுடனே சீதமுண்டாம்
முரட்டையிடும் கடிகை ஏழு முடுகிடாது

## (29). புத்தி வர்மம்

எளிதான புத்திவர்மம் மூலமுதல் வாயில்
ரெத்தம் விழும் மூத்திரத்தில் ரெத்தம் கட்டும்
வழியாக முன்னும் பின்னும் அடைத்து முட்டி
வயிறு ஊதி கடிகை பத்தில் அசாத்தியமாகும். (38)

## (30). சத்தி வர்மம்

சத்தியமாய் சத்திவர்மம் கொண்டதானால்
தானே குணம் உடலதிக தளர்ச்சையாகும்
பார்த்திடவே சன்னி வரும் சுவாசம் நேரே
போகாது சலித்து விம்மி பதைக்குமப்பா
மாறிடவே விழிகள்ரண்டும் மயங்குமப்பா
மரணமுடன் சுளியதுபோல் மாழுமென்றே
தேறியதோர் குறிகுணங்கள் தன்னை ஆய்ந்து
திடமறிந்து உட்பொருளை தெளிந்து பாரே. (39)

## (31). திவளை வர்மம்

-

பாரடா திவளை வர்மம் கொண்டதானால் வாயிலே
பதை தள்ளும் வாய் மூக்கில் நீரும் பாயும்
வாரடா மயங்கி விட்டால் கடிகை பத்து
மயங்காமலிருந்தாக்கால் வரிசை கேளு
ஊரடா செருக்கிருமல் கூடிக்கூடி
உண்டாகும் இருபுறமும் ஒருப்போல் கொள்ளில்
சாரடா நோய் தீரமாட்டாது சொன்னோம்
சயமுறைந்து சடுதியிலே சாவான் காணே. (40)

## 32). ஏந்திக் காலம்

காணுமே ஏந்திக்காலம் சன்னிசீதம்

களைப்புடனே காந்தியுண்டாம் செவி கேளாது

வேணுமென்றால் ஏழுகடிகைக்குள்ளே பாரு

வலக்கரத்தில் கொள்ளில் சன்னி மாறாதென்றே

## (33). பிறதாரை காலம்

-

நாணுமே பிறதாரை காலம் கொண்டால்

நழுகாது கழுத்து வலி நெட்டித்தாளும்

வேணுமென்றே அறிவழியும் பதப்பில் நோகும்

வேகமாய் மறுமுறைகள் விதியாக நோக்கே. (41)

## (34). எழுத்து வர்மம்

ஆகவே எழுத்து வர்மம் கொண்டதானால்

அது சரீரம் கிடுகிடுவென்றாடும் தேகம்

நாகமது போல் சீறும் காறி துப்பும்

நாள் பத்தில் தீராவிட்டால் நம்ப வேண்டாம்

## (35). தூசிக வர்மம்

தோகையே தான் தூசிக வர்மம் கொண்டுதானால்
    சோரை விழும் மலசலமும் பிடித்துக்கொள்ளும்
சாகமுறவே கழுத்து வீங்கும் தண்ணீர்
    தாகமுண்டாம் பதினொன்று தப்பாதென்றேன். (42)

## (36). அனுமார் வர்மம்

என்னுமே அனுமார் வர்மம் கொண்டுதானால்
    எழுந்திடும் கால்களும் தன் சுவட்டில் உன்னும்போது
மன்னவனே கைகாலும் குறுகும் சொன்னேன்
    மந்திபோல் தேகமது வளைவதாகும்
பன்னவே இருபுறமும் ஒதுக்கிக்கூட்டி
    பாருலகில் கிராணி நோய் பதனம் பாரு
இன்னும் இக்குறிகளறிந்து நீ செய்தாயானால்
    எழுந்த பிணி தீர்ந்துவிடும் இயல்புதானே. (43)

## (37). கூம்பு வர்மம்

இயல்பான கூம்பு வர்மம் கொண்டதானால் கேளு
    ஈரலது மூன்றேமுக்கால் கடிகைநேரம்

கயல்போலே துடிக்குமடா வீங்கும் ஈரல்

கனமாகப் பெருமிவிடும் முடிப்புத்தாழும்

அயலான செவியடைத்து வாய் மூடிப்போகும்

அப்பனே பல பலவாம் குணமுமுண்டாகும்

வெயிலான காலமது கடினமப்பா

மீளாது கைமுறைகள் விரைந்துபாரே. (44)

## (38). நேர் வர்மம்

பாரப்பா நெஞ்சில் நேர்வர்மம் கொண்டால்

பதறியே மயங்குமுடல் குளிர்ந்து போகும்

ஊரப்பா நாழிகைதான் இருபத்தொன்பதற்குள்

அப்பனே இளக்கிவிடு உயிர்தான் மீளும்

பாரப்பா காலம் மிச்சம்கொண்டால்

பலநோய்கள் கொழுத்து வலி வாய்வு

கூரப்பா வயிறு மந்திக்கும் ஊண் செல்லாது

குறி குணத்தை ஆராய்து மருந்து செய்யே. (45)

## (39). பன்றிவர்மம்

செய்யவே பன்றிவர்மம் கொண்டதானால்

சிறுபன்றி போலுறுமி அலறும் சொன்னேன்

ஐய்யவே கடிகையது இருபத்தெட்டில்

அடங்கல் பார்த்திளக்கவே அசாத்தியமில்லை

மெய்யப்பா காலுடலும் வியர்த்துத் தண்ணீர்

போல் குளிரும் கை கால் முதிரும் கண்டாய்

பையவே இருபத்தேழில் மிச்சம் கொள்ளில்

பலநோய்கள் கைகால் குத்து உளைவுண்டாமே. (46)

## (40). முண்டெல்லு வர்மம்

-

உண்டான முண்டெல்லு வர்மம் கொண்டால்

உணர்ச்சி கெட்டு மயங்கிவிடும் உண்மையாக

தண்டான சீதமொடு தளர்ச்சையுண்டாம்

தவறhது இன்னுமொரு அடப்பக்காலம்

## (41). அடப்பக்காலம்

-

முண்டாமல் சுமைத்திடுகில் ரெத்தம் காணும்

முக்கியமாய் காலமது உச்சங்கொள்ளில்

வண்டாடும் பல பிணிகள்உண்டாமென்ன

வகுத்திடுவேன் முன்னோருரைத்த உண்மை தானே. (47)

## (42). அத்திச் சுருக்கி

வண்மையாய் பெரிய அத்திச்சுருக்கி கொண்டால்
    மைந்தனே உடல் குறுகிக் கூனிப்போகும்
அண்மையாய் அறிவிழந்து செய்யாதே நீ
    அண்டபகிரண்டத்தும் விசனமுண்டாம்
தண்மை என கடிகை பதினாறுக்குள்ளே
    துஞ்சும் உயிர்  சிறிய அத்திச்சுருக்கி கொண்டால்
உண்மையே வர்மம் இரண்டும் குணம் ஒன்றhகும்
    இளகிடினும் மண்டலத்திலசாத்தியமாமே. (48)

## (43). முன்சுருதி வர்மம்

ஆமென்ற முன்சுருதி வர்மம் கொண்டால் கேளு
    அடிவயிறு கொழுத்து வலி உளைவு சன்னி
ஓமென்ற பாதாதிகேசமெண்சாண்
    உடம்பெல்லாம் வீக்கமுண்டாம் ஒன்றுபோலே
காமென்ற சாகாத மூலியப்பா
    காசினியில் அமுர்துவள்ளி என்று பெயர்

வேமென்று பறித்துவந்து கசக்கி தேகம்

மீதிலிட ஓடிப்போகும் விள்ளொண்ணாதே. (49)

### (44). பின்சுருதி வர்மம்

விள்ளாத பின்சுருதி வர்மம் கொண்டால்

மெய்தளரும் புறமொதுக்கி வலிக்கும் பாரு

விள்ளாதே உள்ளங்கால் கரமதுவும் பெரிச்சலாகி

முதிர்ந்து போகும் சன்னிவரும் அசாத்தியமாகும்

### (45). பள்ளை வர்மம்

உள்ளாக பள்ளைவர்மம் கொண்டதானால்

உடல் குன்னும் வயிறு குன்னிப்பிடிக்கும் பாரு

கொள்ளுமிதல்லால் முதுகு தாரை உள் கொழுத்து

வலித்திடும் காலம் கொண்டால் கேளு. (50)

### (46 - 53). உடல் சுழுக்கி வர்மம்

கொண்டதொரு உடல் சுழுக்கி வர்மம் கொண்டால்

கொண்டவுடன் வயிறூதும் வாய்வு விம்மும்

விண்ட உடன் உள்ளுருக்கி நோயும் காட்டும்

வெகுநாளாய் குறிகுணங்கள் காட்டிடாமல்

கண்ணடைக்கும் மணியசைக்கும் நடுக்கம் கூடும்

கைகாலும் அயர்ந்து விழும் கடிதாய் மீளும்

வண்ணமுறும் கபாலமதில் நீரிளைப்பு

வருத்தும் தான் தனிக்குணத்தை வகுத்துப்பாரே. (51)

## (54). தும்மிக்காலம்

குத்தும் தும்மிக்காலமதின் குணத்தை கேளு

கொண்டவுடன் மலம் விழும் தேகம் கூனும்

பத்தியுடன் இளக்கிவிடு இளகாவிட்டால்

பதினெட்டு நாழிகைக்குள் பறக்கும் சீவன்

அற்றுதே சாத்தியமானாலும் கேளு

ஆனந்த வாய்வு அதிசாரமுண்டாம்

புத்தியுடன் பின் சொல்வேன் இதற்குப் பின்னால்

பெருநோயும் சயநோயும் இளகும் பாரே. (52)

## (55). கைக் காலம்

இளக்கவே கைக்காலம் கொண்டதானால்

இரு புயமும் விழுந்து மதிமயங்கும் போதக்கேடாம்

## (56). சடப்பிறக்காலம்

உளக்கவே சடப்பிறக் காலம்கொண்டால்

உடன் மயங்கும் கண் விழித்திருக்கும் கன்னல்

வளமான பதினெட்டிற்குள் இளக்காவிட்டால்

வலியுடனே குடலில் வாய்வுண்டாகும்

விள்ளவே முன் கூட்டிக் கூறைப்பார்த்து

மெய்யான கிறுதமுடன் தைலம் கொள்ளே. (53)

## (57). கிளிப்பிறக்காலம்

கொள்ளவே கிளிப்பிறக்காலம் கொண்டால்

கோணி ஒரு சிரிசிரிக்கும் வாய்பேசாது

மெள்ளவே கொண்டவுடன் மயங்கிடாது

மைந்தனே கடிகை பதினெட்டாம் பாரு

## (58). கிளி மேகவர்மம்

கிள்ளவே கிளிமேக வர்மந்தானும்

கொண்டவுடன் கூவென்று கூவும் பாரு

விள்ளவே மதிமயங்கும் கடிகை நாலில்

வெறிவிட்டுப் பதினெட்டில் இளகும் பாரே. (54)

## (59). பூணூல் காலம்

கும்பியே பூணூல் காலம் குணமே தன்னில்

கொண்டவுடன் மதிமயங்கி மயக்கம் கொள்ளும்

நம்புமே குற்றமது செய்யும் சொன்னோம்

நாள் சென்றால் குணக்கேடு வந்ததென்றால்

வம்பிலே விழுந்ததுபோல் நரம்புகூடி

வலுவாகி இருந்தயர்ந்து புயமும் வீழ்ந்து

தம்பவே சன்னியொடு கைகால் கோச்சல்

சரீரமதை ஒருபக்கம் திருப்பும்தானே. (55)

தானான வரலாறு அறிந்து உணர்ந்து

தவறாமல் மருந்துசெய்தால் பிணிகள் நீங்கும்

கூனான இருபுறமும் ஒரு போல் கொள்ளில்

கூறு தசவாய்வதுவும் அடைத்துப்போகும்

கோனான சீதமுண்டாம் கொழுத்து வலியுடனே சயமுங்காணும்

காணவே குறிகுணத்தைக் கூர்ந்து நீயும்
மேனான மருந்து பல செய்தாலும் தான்
மீளாதென்றே உலகில் விளம்பலாமே. (56)

## (60). நட்டெல்லு வர்மம்

ஆமப்பா நட்டெல்லு வர்மம் கொண்டால்
அகம் குறுக்குக் கூனும் நடப்பதுவே கடினமாகும்
வேமப்பா கோர வாதத்தில் கொண்டுவிடும்
எண்ணெயுடன் தைலமது விரைந்தே பார்த்தே

## (61). கச்சை வர்மம்

ஏமப்பா பலவிதமாய் சிகிச்சை செய்து
இயல்பாக கச்சைவர்மம் கொண்டால் கேளு
தாமப்பா உந்திதனில் உளைச்சலுண்டாம்
தம்பிக்கும் மலசலமும் தளர்சையாமே. (57)

## (62). கைக்கூட்டுக் காலம்

களைத்துமே கைக்கூட்டுக்காலம் கைப்புசம் விழுந்து தாழும்
மதிமயங்கும் பன்னிரெண்டு நாளும் சென்றhல்

விளைந்திடவே சாத்தியம் தான் குணமேயாகும்

வேண்டியதோர் பரிகாரம் செய்துபாரு

## (63 - 70). வாய்வு காலம்

அழைத்திடவே வாய்வு காலம் வண்ணம் எட்டெல் முனையின்மீதே

அடித்திட்டால் காய்ச்சல் குளிரும் பனியுண்டாமே

இளைத்திடவே வாய்வு குன்மம் பிறந்தால் கேளு

இருபுறமும் ஒரு குணமாய் இசைந்துப் பாரே. (58)

## அடங்கல்

பாரப்பா அடங்கல் தன்னை சொல்லக்கேளு

பரமகுருவை அனுதினமும் பணிந்து போற்றி

பேரப்பா தடவுமுறை பேணிச் செய்து

புறமிருந்து எல்லுமுறை பேணிச் செய்து

வாரப்பா நரம்பெல்லாம் இழுத்துப் பின்னி

வாங்கியே தடவி விட்டு முன்னும் பின்னும்

ஊரப்பா செவிக்குழியில் ஊணி ஏந்தி

உள்தாரை புறதாரை தடவிக்கோரே. (59)

தடவியே வலது கையை வலத்தே கட்டி
    தவறாமல் இடது கை இடத்தே கட்டி
மடக்கியே முன்னும் பின்னும் பிடித்துக் கட்டி
    வாங்கியே சட்டத்தில் சவட்டிக்கொண்டு
உடலிலே வலம் இடமாய் திருச்சுக் கட்டி
    ஓங்கியே உதறிவிடத் தீருமப்பா
சடமதனில் விடுவதற்குத் தைலம் சொன்னேன்
    சிறிதென்று எண்ணாதே செகத்தில் செய்யே. (60)

## தைலம்

செய்யவே தைலமது செப்பக் கேளு
    சிறப்பான நல்லெண்ணெய் படிதானொன்று
நொய்யவே பசுவின் நெய் படி கால் நின்ப
    நெய்யுடனே இசங்கின் சாறு படி தானொன்று
உய்யவே அதிமதுரம் கிராம்பு முத்தம்
    உர்பனமாய் சாதிக்காய் தாளிசபத்திரி
வெய்யவே அரைப்பலமாய் அரைத்துக் காய்ச்சி
    வடித்தரித்து புறத்துமிடு வரிசையாமே. (61)

pசையாய் கண்டமுதல் நாபி மட்டும்

வகுத்ததோர் வர்மமது நாற்பத்தைந்து

பரிசையாய் நரம்பது தான் வெவ்வேறாக

படுதலமும் குணங்குறியும் பகர்ந்ததெல்லாம்

கரிசனையாய் இளக்குமந்த அடங்கலோடு

கைமுறையும் செய்முறையும் கண்டு கூறி

பிரியமாய் தைலமதும் பிரித்துச் சொன்னேன்

பொய்யென்றெண்ணாதே புரிந்து செய்யே. (62)

## (71). மூத்திரக்காலம்

எண்ணரிய மூத்திரக் காலம் கொண்டால்

எண்ணாதே மூத்திரந்தான் கழிந்து போகும்

புண்ணில்லாமல் சுருசுரென சிறுநீர் துள்ளிபோடும்

போகுமடா ஈரெட்டு நாழிகைக்குள்

## (72). கல்லிடைக்காலம்

விண்ணில்லா கல்லிடைக்காலம் கொண்டால் உடல்

வியர்த்து குளிர்ந்து தான் பார்க்கும்

திண்ணமுடன் புரிகடிகை எழுமூன்றுக்குள்

திடமுடனே மறுகாலம் நோக்கிக் கொள்ளே. (63)

## (73). வலம்புரிக்காலம்

மறுகியே வலம்புரிக்காலம் கொண்டால்
மருவு சிறுநீர் பேதி கழியாதப்பா
நிறுவியே வயிறூதும் காலுரெண்டும்
நிமிர்ந்து போம் கைக்கடங்கி நின்றிடாது

## (74). இடம்புரிக் காலம்

தறுகியே இடம்புரிக் காலம் கொண்டால்
தண்டுவலி உளைவு குத்தும் சரீரம் சீறும்
அறுகு நீரொழுகும் படி பேதிபோகா
அடுத்தடங்கல் பார்த்து நீ இளக்கிக் கொள்ளே. (64)

## (75 - 76). வெல்லுறுமி - வல்லுறுமி

அடவாக வெல்லுறுமி வல்லுறுமி அந்நரம்பில்
அசைவு கொண்டால் குறி குணத்தைக் கேளு
வயிற்றில் நோவுகொண்டு சன்னி சீதம்

அடவாக மண்டையிலே மயக்கமுண்டாம்

அமுர்தமது கலங்கி மெத்த

போதக்கேடு பித்தரை போலாட்டுமப்பா

நரம்பினுடக் கூறு தன்னை

தெளிவாக சொல்லி விட்டோம் தெளிந்து பாரே. (65)

## (77). நரங்குன்றி காலம்

விட்டிடவே நரங்குன்றிக் காலம் கொண்டால்

வீங்குமடா சரீரமெங்கும் மூச்சாடாது

தட்டிடவே இளக்குமுறை முறை செய்யாதே நீ

சாத்தியமென்றெண்ணாதே அசாத்தியமாகும்

## (78). அணிவர்மம்

அட்டிடவே அணிவர்மம் கொண்டதானால்

முறிந்து ரெத்தம் பாய்ந்திறந்து போகும்

தொட்டிடவே வேண்டாம் காண் அசாத்தியமாகும்

சொல் பிரம்மன் வந்தாலும் மீளாதெண்ணே. (66)

## (79). ஆந்தை வர்மம்

என்னவே ஆந்தை வர்மம் கொண்டதானால்
இயல்பாக செய்குணத்தை இயம்பக்கேளு
அன்னமே தளர்ச்சையுண்டாம் உணர்வுண்டாகும்
அடுத்தடுத்து மூச்சடங்கும் போதக்கேடாம்
மின்னவே சாந்தம் வரும் ஏழாம் நாளில்
புத்தியது மயங்கினாலும் புகழ்ந்து கேளு
உன்னவே வர்மமது ஒன்பதுக்கும்
உத்தமனே அடங்கல்தனை உற்றுக்கேளே. (67)

## அடிவயிறு வர்மங்கள் ஒன்பதிற்கும் அடங்கல்

உற்று நீ அடங்கலது சொல்லக்கேளு
உறப்புடனே கீழ் நோக்கித் தடவிக் கொண்டு
அற்றுமே சவட்டு முறை அடக்கிச் சென்று
அதன் மேலே நரம்பிளக்கி வலித்துப் பின்னி
உற்றதோர் கால் இரண்டும் திரிச்சுக்கூட்டி
உள்தாரை குறுக்கடக்கி உகந்து செய்து
ஏற்றதோர் கச்சையது இறுக்கிச் செய்ய
இயல்பாகக் கீழ் நோக்கி தடவிக் கட்டே. (68)

கட்டியே இருபுறமும் அசைத்துக்கொண்டு

கனமாகவேயதனை இறுகச் செய்து

இட்டமுடனோரடங்கல் தலத்திலூன்றி

இரு சென்னியடங்கலுமே திடமாய் செய்தால்

கட்டமதாய் இந்த உயிர் மீளுமப்பா

கைமுறைகள் தவறாமல் கருதிப்பாரே

வட்டமுடன் குருபரனை மனதிலு}ன்னி

வர்மத்தின் அடங்கலிலே வகையாய் செய்யே. (69)

**அடிவயிறு வர்மங்கள் ஒன்பதிற்கும் எண்ணெய்**

செய்யவே எண்ணெயதன் விபரந்தன்னை

செப்புகிறேன் நல்லெண்ணெய் படிதானொன்று

பய்யவே ஏரண்டத்தெண்ணெய் பாதி

பண்பான பழச்சாறு விட்டு மத்தித்து

நெய்யதனை சூரியனில் வற்றக் காய்ச்சி

நீர் சுண்டினாலுடன் வடித்து குப்பிக்கேற்றி

எய்யவே நோயறிந்து விதம் போல் செய்ய

ஏற்ற பிணி சுகமாகுமியல்பு கண்டாய். (70)

கண்டிடவே நாபி முதல் மூலம் மட்டும்

கலந்த வர்மமொன்பதையும் கருதிப்பார்த்து

கொண்டிடவே பேர் தலமும் குணமும் கூறும்

குறிப்பாக அடங்கல் முறை இளக்கும் பாகம்

விண்டிடவே தைலத்தின் விபரந்தானும்

விரித்துரைத்தேன் கரமதனிலேழிரண்டும்

நின்ற குணந்தன்னை இதன் மேலாக

வன்மையாய் வழுத்துகிறேன் மகிழ்ந்து கேளே. (71)

## (80- 84). மொழிக்காலம்

மகிழ்வான மொழி தன்னில் காயங்கொண்டால்

மைந்தனே மொழிகனத்து களைப்புண்டாகும்

திகழவே தரிப்புளைச்சல் வீக்கமுண்டாம்

தெட்சணையாம் காலமது செப்பக்கேளு

## (85). தெட்சணை காலம்

கவிழவே அசாத்தியமாம் களைப்பும் நோவும்

கண்புகையும் சன்னியோடு சீதமுண்டாம்

துகழவே தினம் நாலில் மரணமாகும்

துணிவாக செய் குணங்கள் சூட்சம் பாரே. (72)

## (86). சூண்டோதரி

சூட்சமாம் சூண்டோதரிகுணமேதெனில்
துடிக்குமப்பா சரீரமெங்கும் வீக்கமுண்டாம்
சொல்லுகிறேன் விரும்பி கேளு
கொண்டு கோணுமப்பா பதினொன்றாம் நாள்

## (87). சுண்டோதரி

பேச்சப்பா சுண்டோதரிகுளிர் வெதும்பி
பனியிளகி கைகாலும் தடித்து வீங்கும்
காச்சியாமிக் குறிகள் தன்னைக் கண்டால்
கைமுறையாய் தைலமிட்டு தடவிக்கொள்ளே. (73)

## (88). வெள்ளை வர்மம்

தடவுகின்ற கரமதில் வெள்ளை வர்மம் கொண்டால்
தவறாது களைப்புடனே தரிப்புளைச்சல்
வடவியே சுரமுடனே புகைச்சலுண்டாம்
மாறிவிடும் எட்டரைக்குள் வரிசையாக

## (89). மணிபந்த வர்மம்

கடவியே மணிபந்த வர்மம் கொண்டால்

கைகளைப்பு வீக்கமுண்டாம் குளிரும் தேகம்

அடவியே தைலமிட்டு தடவிக் கொண்டு

அடவாக இளக்குமுறை செய்து கொள்ளே. (74)

## (90). ஆந்த வர்மம்

கொள்ளவே ஆந்த வர்ம குணத்தைக் கேளு

கொண்டவுடன் களைப்பிளகி வீங்கிப் போகும்

விள்ளவே முன் சொன்ன தைலமிட்டு

முறையாக தடவுமுறை செய்து பாரு

## (91). முடக்கு வர்மம்

கள்ளவே முடக்கு வர்மம் வீக்கமுண்டாம்

களைப்பிளகி கைகள் தரித்துக்குத்து

தள்ளவே தைலமது போட்டு நன்றாய்

தடவியுடன் இளக்கிவிடு சாத்தியமாமே. (75)

## (92). முண்டக வர்மம்

சாற்றியதோர் முண்டகத்தில் முறிந்ததானால்

சாகாமல் கைகளைப்பு நோவுண்டாகும்

போற்றியதோர் சன்னியோடு சீதமுண்டாம்

பெரு நரம்பு இளகியொரு புறம் வலிக்கும்

## (93). அசைவு வர்மம்

மாற்றியதோர் அசைவு வர்மம் குணமேதெனில்

வந்ததொரு புசம் வீழும் களைப்புண்டாகும்

வீற்றியதோர் விதனமுண்டாம் வீக்கங்காணும்

வீறாக இரண்டு கைக்கும் குணமிதாமே. (76)

-

## கரவர்மங்கள் 14-க்கும் அடங்கல்

ஆமப்பா அடங்கலது சொல்லக்கேளு

அப்பனே தடவுமுறை தடவிக் கொண்டு

தாமப்பா வலித்திருத்தித் தடவிக் கொண்டு

தயங்காமல் கையதனை நீட்டியே தான்

கைக்குழியில் நரம்பிளக்கி

இயங்கவே விரலெல்லாம் வலித்து விட்டு

ஓமப்பா உள்ளடங்கல் முறையும் செய்து

ஊற்றிவிடு தண்ணீருதான் மூன்று நாளே. (77)

# கரவர்மங்கள் 14-க்கும் எண்ணெய்

எண்ணெயொன்று சொல்லக்கேளு
முக்கியமாய் நல்லெண்ணெய் படிதானொன்று
சம்பழச்சாறு உழக்குடனே
துலங்குமேரண்டமே அரைதான் போடு
அடுப்பேற்றி அனலைமூட்டி
பதம் பார்த்து இறுத்து வாங்கி
நரம்பிளக்க வேணுமென்றால்
நுணுக்கமாய் எண்ணெய் விட்டு தடவிப்பாரே. (78)

பார்த்திடவே ஈரேழு காலமப்பா
படி பேர் தலமும் குணங்களோடு
அடங்கல் முறையானதெல்லாம்
செப்பினோம் தைலமதன் தீர்க்கம் சொன்னோம்
வார்த்திடவே பாதமதில் ஐமூன்றான
வர்மத்தின் பேர்தலமும் பின்னுரைப்போம்
கோர்த்திடவே செய் குணங்கள் தானுமிப்போ
கூறுவோம் நாள் முறையும் கூர்ந்து கேளே. (79)

## (94). வெள்ளை வர்மம்

நாளான கால் வெள்ளை வர்மம் கொண்டால்
    நரம்பு வலி இடுப்பு வலி மண்டைக்குத்து
பாழான தேகமது நிமிரொட்டாது
    பாதமது களைப்புளைவு பனிக்கும் தேகம்

## (95). உப்புக்குற்றிக் காலம்

கோளான உப்புக்குற்றிக் காலம் தானும்
    கொண்டவுடன் மயங்கும் சாத்தியந்தான்
ஆளான காலமது வெகுவாய் கொண்டால்
    அடியெடுத்து வைத்திடுவதரிது தானே. (80)

## (96- 100). குண்டிகைக் காலம்

அரிதான குண்டிகை காலத்தைக் கேளு
    அப்பனே மொழி பிசகும் களைப்புண்டாகும்
மரிதான விசம் போல தரித்து வீங்கும்
    பாங்கான தைலமது விட்டுப்பாரு

## (101). விர்த்தி வர்மம்

விரிதான விர்த்தி வர்மம் கொண்டதானால்

மைந்தனே களைப்புடனே சன்னிசீதம்

பெரிதான தளர்ச்சையுண்டாம் மயங்கும் தேகம்

பேணியே காலமுறை செய்துபாரே. (81)

## (102). சுண்டோதாp வர்மம்

சுண்டோதரிகுணத்தைக் கேளு

பட்டவுடன் களைப்பிளகி வீக்கமுண்டாம்

மூன்றுக்குள் அசதிகாட்டி

நிச்சயமே எழுந்திருக்கும் நிசமும் சொன்னேன்

## (103). படவர்மம்

படவர்மம் கொண்டதானால்

சிந்தை கெடும் நரம்பு வலியுளைச்சல் வீக்கம்

அத்தலத்தில் முறிந்ததானால்

அப்பனே காயமது ஆறாதென்னே. (82)

## (104). கண்ணுப் புகைக்காலம்

கண்ணு புகைக்காலம் கொண்டால்

அப்பனே சீதம் வரும் வீங்கும் கை கால்

சாறாகத் தடவிவிட்டு முன்னே சொன்ன

தைலமது விட்டிடவே சாந்தமாகும்

தாறாகத் தண்ணீரில் மூன்று நாள் தான்

தடவி விட மாறி விடும் தகைமை தானே

-

## (105). குதி வர்மம்

வீறாக குதிவர்மம் கொண்டதானால் உடன் தானே

மயங்கி விழும் விதனமுண்டாம் விரைந்து பாரே. (83)

## (106). குதிரை முகக்காலம்

விரைவாக குதிரை முகக்காலம் கொண்டால்

மிக்கதோர் களைப்பிளகி வீங்கி ஊதும்

தரையாக சன்னி கொழுத்துளைவு காய்ச்சல்

தணுப்புடனே சூலை நீர் காட்டும் பாரு

பரையான பட்டை சூரணத்தை உண்ண

பற்றிய வாத சூலை நீர் பறந்து போமே

உரையான பொருளதனை விரித்து சொன்னோம்

உத்தமனே பார்த்தறிந்து உகந்து செய்யே. (84)

## (107). முட்டு வர்மம்

உகந்திடவே முட்டுவர்மம் கொண்டதானால்

உத்தமனே சிரட்டையது நகண்டு போகும்

புகழ்ந்திடவே விதனமது பொறுக்கொண்ணாது

போதமது கெட்டுவிடும் தளர்ச்சையாகும்

மகிழ்ந்திடவே சிரட்டையது இழுத்து நேரே

பசை மெழுகி அதின் மேலே பற்றுப் போட்டு

இகழ்ந்திடாமல் கட்டுமுறை செய்து பின்னே

எண்ணெயிட்டு கைப்பாகம் இதமாய் செய்யே. (85)

## (108). உறுமி வர்மம்

கையான உறுமி வர்மம் கொண்டதானால்

கதித்திடவே கால் களைப்பு நோவுண்டாகும்

துய்யவே ஏழாம் நாள் சாத்தியமாகும்

தூக்கு முறைகாலம் மூவைந்துமாச்சு

வையகத்தில் பரணிவிட்டு தடவினாக்கால்

மைந்தனே தீராத பிணிகளெல்லாம்

பைய்யவே தைலமதை வடித்துப்போட்டால்

பற்றியதோர் நோய்களெல்லாம் பறக்கும் தானே. (86)

## வர்மத்தைலம்

பறந்திடவே தைலமொன்று பகரக்கேளு
பரிவாக நல்லெண்ணெய் படிதானொன்று
கறந்திடவே நின்பெண்ணெய் படிதான் காலு
கண்டபடி தழுதாளைச் சாறும் கூட்டி
சிறந்திடவே சாதிக்காய் வசம்பு ஓமம்
சீரகம்ரெண்டு ஏலமுடன் தேவதாரம்
நிறைந்திடவே வகையொன்று கழஞ்சு ரெண்டு
சேர்த்தரைத்து பதம் பார்த்து வடித்துக் கொள்ளே. (87)

வடித்ததோர் தைலமதால் வசவுண்டாகும்
வலுநரம்பு உடைவோடு முடக்கம் தீரும்
நு}ல் முறையை கண்டு கொண்டு
பகர்ந்தபடி தைலமதை பதனம் பார்த்து
பிடித்திருந்த நோய் கண்டு தலங்கள் கண்டு
பிசகாமல் இடத்தினுட பேதம் கண்டு
அடித்ததோர் கண்டமுதல் மூலம் கைகால்
வகை பிரிவுக்கும் நீயறிந்து பாரே. (88)

பாரப்பா கேசாதி பாதமீறாய்

பற்றி நின்ற வர்மமதை பகுதி செய்து

சீரப்பா பீரங்கி விரித்துச் சொன்னோம்

சீர் குணமும் திருப்புமுறை தைலப்போக்கும்

சேரப்பா கைமுறையும் செய்முறையுந்தான்

செப்பினேன் இன்னுமொரு சூத்திரந்தான்

கூரப்பா வர்மத்தின் நரம்பின் குற்றம்

கொண்டதானால் குறி குணத்தை கூறுவேனே. (89)

## நரம்பில் குற்றம் கண்டால்

கூறுவேன் நரம்பில் தானே குணமுடன் சூடு உண்டாம்

வீறுடன் சுமை கபங்கள் விக்கலும் சர்த்தி தாகம்

தேறிட ஒட்டாதப்பா சுரமுடன் சன்னி தோன்றும்

நீறிடும் தேகமெல்லாம் நிமிரவும் குனியவுமொட்டாதே. (90)

## அஞ்செண்ணெய் தைலம்

ஒட்டவே சகலவர்மம் உண்மையாய் தீரவென்றhல்

பட்டிட நின்பு சென்னை பசுவின் நெய் எள்ளினெண்ணெய்

கட்டிடும் தேங்காய் எண்ணெய் கொண்டிடு வகை நாழியாக

விட்டிடும் குன்றி தொட்டால்வாடியும் விராலி சேரே. (91)

சேர்த்திடும் மணத்தக்காளி சிறந்திடும் கண்டங்கத்தாp

பார்த்திடும் தாளியோடு பகர்ந்திடும் சாறு நாழி

ஏர்த்திடும் வகையாய் சேர்த்து இணங்கவே கற்கம் சுக்கும்

வார்த்திடும் அரத்தை சிங்கி வளர் சீரகம் மதுரமாமே. (92)

ஆமெனும் மிளகுரெண்டும் அக்கறாஏலத்தோடு

தாமெனும் சித்திர மூலம் தனிப்பலமோரெண்டதாமே

வாமெனும் தூணி நீரில் வகை நாலு நாழியாக வற்றி

காமெனும் கற்கமொன்று கழஞ்சொன்றhய் அரைத்துச் சேரே. (93)

சேர்த்ததை தாளியொன்றில் திறமுடனே கலந்து காய்ச்சி

பார்த்ததை கற்பருவம் பதமுடன் வடித்து மைந்தா

ஏர்த்திடு நோயை கண்டு இணங்கியே கரண்டி நெய்யை

தீர்த்திடும் நோயை எல்லாம் நிச்சயம் தீரும் சொன்னேன். (94)

## முடங்கள் தீர தைலம்

சொல்லுவேன் முடங்களெல்லாம் சூட்சமாய் தீர்வதற்கு

வெல்லவே சம்பழச்சாறு விரவியே குமரிச்சாறும்

எல்லுமே ஏரண்டம் தேங்காய் எண்ணெய் ரெண்டுடனேயப்பா

அல்லுமே பாதாள மூலி அரைக்க சனிநாயகம் வெந்தயம். (95)

வெந்தயம் ஒக்கச் சேர்த்து வேவித்து தைலம் தன்னை

பந்தயம் போட்டு மைந்தர் பார் முறிவு தன்னிலிட்டால்

நற்பாதந்தன்னை கருதினால் தீருமென்று

உந்தனுக்குரைத்தேனப்பா உகந்து நீ அறிந்து செய்யே. (96)

## ஆடாதோடை கசாயம்

செய்திடுமோர் கசாயமது வழுத்தவேன் மாது சொன்னாள்

நெய்த்திடும் ஆடாதோடை நிறைபலம் நூறு மூலம்

செய்திடும் பாணி நூறு சேர்த்திடு கசாயம் வற்றி

பொய்த்திடா சோடயங்கள் போது இருக்க கண்டோம். (97)

கண்டத்தில் கருக்கு வெள்ளம் கருதிடும் சோடயந்தான்

கொண்டிடா ரண்டு நீரும் கூட்டி ஒன்றாகச் சேர்த்து

விண்டிடா கோலரக்கு விட்டிடு பலமேழதாகும்

மிண்ட படியாக மேவி ஈராறு வேளை கொள்ளே. (98)

கொள்ளடா பத்தியந்தான் கூர்மையாய் கடினம் காத்தால்
தள்ளுமே தொண்ணூற்றாறு வர்மத்தில் கொண்ட ஈடும்
விள்ளவே வேண்டாமிந்த விதமுள்ள வித்தையப்பா
கள்ளமென்றெண்ணாதே நீ கார்முகில் வர்ணனாணே. (99)

ஆணே சொல் வசனங்கள் அறிந்து நீ நடந்தாயானால்
பேணியே செய்ததெல்லாம் பிசகாமல் பலிக்கும் சொன்னேன்
நீணிலத்தனிலே சொன்ன நிச்சய நூல் இதென்று
பேணியே ஏந்தி சொன்னோம் பீரங்கி நூறும் முற்றே. (100)